சமூக நீதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

**கடிதம் (நிலை) எண். 84 /சிஉ_தி-I/ 2026, நாள். 16.10.2026**

அனுப்புநர்
டாக்டர்.என். சுப்பையன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர் (முசஉபொ),
ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.

ஐயா,

பொருள்: அறிவிப்பு – சமூக நீதித் துறை – 2026-2027-ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு — வணிகத் துறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்கேற்பினை அதிகரிக்க "வணிக வாயில் - தொழில் முனைவு வாய்ப்புத் திட்டம்" என்ற திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்த அனுமதி - ஆணை வெளியிடுதல் - தொடர்பாக.

பார்வை: மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடிதம் எண்.டி/0010/2026, நாள்.02.09.2026.

---------

2026-2027ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :-

***வணிகத்துறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்கேற்பினை அதிகரிக்க "வணிக வாயில் - தொழில்முனைவு வாய்ப்புத் திட்டம்" செயல்படுத்தப்படும்***

2. மேற்படி அறிவிப்பை செயல்படுத்தும் விதமாக மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் தனது 02.09.2026 நாளிட்ட கடிதத்தில் வணிகத் துறையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் பங்கேற்பினை அதிகரிக்க "வணிக வாயில் தொழில் முனைவு வாய்ப்புத் திட்டம்" என்ற திட்டத்தினை தாட்கோ மூலம் செயல்படுத்தும் விதமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், இந்து சமய அறநிலையத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் வாயிலாக கட்டப்படும் வணிக வளாகங்கள் மற்றும் சிப்காட் (SIPCOT), சிட்கோ (SIDCO), டிட்கோ (TIDCO), டைடல் பூங்கா (TIDEL Park Ltd) மற்றும் டைசல் உயிர் பூங்கா (TICEL Bio Park Ltd) ஆகிய நிறுவனங்கள் புதிதாக உருவாக்கும்

தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்களில் உள்ள தொழில் மனைகள் அல்லது கட்டப்பட்ட தொழிற்கூடங்களில் 10% ஒதுக்கீட்டை தாட்கோவிற்கு வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேற்படி கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், இந்து சமய அறநிலையத் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளின் வாயிலாக கட்டப்படும் வணிக வளாகங்கள் மற்றும் சிப்காட் (SIPCOT), சிட்கோ (SIDCO), டிட்கோ (TIDCO), டைடல் பூங்கா (TIDEL Park Ltd) மற்றும் டைசல் உயிர் பூங்கா (TICEL Bio Park Ltd) ஆகிய நிறுவனங்கள் புதிதாக உருவாக்கும் தொழிற்பேட்டைகள் மற்றும் தொழில்நுட்பப் பூங்காக்களில் உள்ள தொழில் மனைகள் அல்லது கட்டப்பட்ட தொழிற்கூடங்களில் ஒதுக்கீட்டை, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் நிர்ணயிக்கும் விலையில் தாட்கோ பெற்று, தகுதியான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு சலுகை விலையில் அல்லது தவணை முறையில் வழங்க ஆதிதிராவிட நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வழங்கப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

ஏ. சந்திரசேகர்
16/10/2026.

அரசு செயலாளருக்காக

ஏ.சி
16/10/26

<u>நகல்</u>

மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18.
மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர்,சென்னை -600 009.
சமூக நீதித்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
சமூக நீதி (ஆதிந -5) த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.